

## திராவிட மாடல் ஆட்சி தொடர உறுதியேற்போம்!

# சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி, பகுதி, ஒன்றியம், வட்டம், கிளை மற்றும் பாக இளைஞர் அணி புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர்– துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை,செப்.3-**

**சென்னை தெற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கிளைகள், வார்டுகள், பாகங்களில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் நேற்று முன்தினம் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. இதில் இளைஞர் அணிச்செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.**

**அப்போது அவர், 2026-சட்டமன்றத் தேர்தலில் இயக்கத்தின் முன்கள வீரர்களாக, கழக முதன்மை அணியின் பொறுப்பாளர்கள் என்ற பெருமையுடன் பணியாற்றி முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிடமாடல் ஆட்சி தொடர உறுதியேற்போம்! வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு" என்று குறிப்பிட்டார்.**

**இளைஞர் அணிச்செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

இன்றைக்கு இந்த சென்னை தெற்கு மாவட்டத்துக்குட்பட்ட சோழிங்கநல்லூர் தொகுதியில் உள்ள பகுதி, ஒன்றிய, வட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக அமைப்பாளர்களுக்கான அறிமுகக் கூட்டத்தில் உங்களை எல்லாம் சந்தித்து உங்களிடத்தில் உரையாற்றுவது மிகுந்த மகிழ்ச்சியையும், பெருமையையும் தருகிறது.

சென்னை தெற்கு மாவட்டத்தில் மொத்தம் 5 தொகுதிகள். ஏற்கனவே, நான்கு தொகுதிகளுக்கான அறிமுகக் கூட்டங்கள் முடிந்துவிட்டன.

### தனிச்சிறப்பு உண்டு

சென்னை மேற்கு மாவட்டத்துக்கு மூன்று தொகுதிகளுக்குச் சேர்த்து கூட்டம் நடத்தினோம். தெற்கு மாவட்டத்தில் இரண்டு தொகுதிகளாகப் பிரித்து நடத்தினோம். இன்றைக்கு இந்த சோழிங்கநல்லூர் தொகுதிக்கு, என்ன சிறப்பு என்றால், சோழிங்கநல்லூர் தொகுதிக்கு மட்டும்தான் தனியாக இந்த அறிமுகக் கூட்டத்தை நடத்துகிறோம். சோழிங்கநல்லூர் தொகுதிக்கு இன்னொரு தனிச்சிறப்பு உண்டு. தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளில் மிகப் பெரிய தொகுதி என்றால் அது சோழிங்கநல்லூர் தொகுதிதான். இந்த சிறப்பு வாய்ந்த தொகுதிக்கு உட்பட்ட இளைஞர் அணியில் பொறுப்புக்கு வந்துள்ள உங்கள் அத்தனைப்பேருக்கும் முதலில் என் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய நிர்வாகிகள் பட்டியல், இன்று காலையில் `முரசொலி'யில் வெளியாகி, இன்று மாலையிலேயே அறிமுகக் கூட்டத்தை நடத்துகிறோம். இளைஞர் அணியால் மட்டுமே இது சாத்தியம் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பல முறை சொல்லியிருக்கிறேன். எத்தனையோ பொறுப்புகள் இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர், விளையாட்டு மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்கத் துறையின் அமைச்சர், இப்போது துணை முதலமைச்சர் என இப்படி எத்தனையோ பொறுப்புகள் வந்தாலும், எனது மனதுக்கு மிகுந்த நெருக்கமான பொறுப்பு என்றால், அது கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர் என்ற பொறுப்புதான். அதை மீண்டும் இங்கே சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். அந்த உணர்வோடுதான் இன்றைக்கு உங்களை சந்திக்க வந்துள்ளேன்.

### இளைஞர் அணி

எத்தனையோ நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டாலும் இளைஞர் அணி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்களைச் சந்திக்கும்போது சொந்த அண்ணன், தம்பி, எனது சொந்த குடும்பத்தில் இருக்கின்ற பார்க்கின்ற உணர்வு எப்போதும் ஏற்படும். 1980-இல் மதுரை ஜான்சிராணி பூங்காவில் கலைஞர் அவர்கள் நம்முடைய இனமானப் பேராசிரியர் அவர்களின் தலைமையில், அவருடைய வாழ்த்துகளோடு நம்முடைய தலைவர் அவர்கள் இந்த இளைஞர் அணியைத் துவக்கினார். அதன் பிறகு கிட்டத்தட்ட 45 ஆண்டுகள் இளைஞர் அணியைப் படிப்படியாக நம்முடைய தலைவர் அவர்கள் வளர்த்து, இன்றைக்கு ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக இளைஞர் அணி உருவாகி இருக்கிறது என்றால், அதற்கு நம் தலைவர் அவர்கள்தான் காரணம்.

கழகத்தில் எத்தனையோ அணிகள் இருக்கின்றன. ஒரு அணியின் செயலாளரும் உட்கார்ந்து இருக்கிறார். தவறாக நினைக்கக் கூடாது. கல்வியாளர் அணியின் செயலாளர் அவர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். தவறாக நினைக்கக்கூடாது. கழகத்தில் 25 அணிகள் இருந்தாலும், கலைஞர் அவர்களால் தி.மு.க-வின் முதன்மை அணி என்று பாராட்டைப் பெற்றது நம் இளைஞர் அணிதான்.



### வழிகாட்டுதல் முக்கியம்

இங்கே இளைஞர் அணி நிர்வாகிகள் மட்டுமல்ல, மாவட்ட, ஒன்றிய, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள் வந்திருக்கிறார்கள். இன்றைக்கு இளைஞர் அணி இப்படி ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக வளர்ந்திருக்கிறது என்றால், அதற்கு அவர்களின் ஒத்துழைப்பும், வழிகாட்டுதலும் மிக மிக முக்கியமான காரணம். அதற்கு இந்த நேரத்தில் அத்தனை நிர்வாகிகளுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தியாவில் பல கட்சிகள், பூத் கமிட்டி அமைக்கவே தடுமாறிக்கொண்டு இருக்கிற நேரத்தில், பூத்துக்கு ஒரு இளைஞர் அணி அமைப்பாளரை நாம் நியமித்து இருக்கிறோம் என்றால், அது இளைஞர் அணியின் சாதனை என்றுச் சொன்னால், அது மிகையாகாது. புதிதாகப் பொறுப்புக்கு வந்திருக்கின்ற நீங்கள் காலரைத் தூக்கிவிட்டுச் சொல்லலாம். யாருடைய பரிந்துரையிலும் வரவில்லை, சாதாரணமாக இந்த இடத்துக்கு வரவில்லை. எங்களின் உழைப்பினால், இந்த இடத்துக்கு வந்திருக்கிறோம் என்று பெருமையாச் சொல்லலாம்.

முதலில் மாவட்டக் கழகச் செயலாளர், பகுதி, வட்டச் செயலாளர்களின் பரிந்துரைகளை வாங்கினோம். அந்தப் பரிந்துரை கடிதங்களை மட்டும் வைத்து, நிர்வாகிகளை நியமிக்கவில்லை. அன்பகத்திலிருந்து இதற்காகவே ஒரு தனிக் குழு அமைத்து, பரிந்துரை செய்யப்பட்ட நபர்கள் ஒவ்வொருவரையும் தொடர்பு கொண்டு பேசினோம். அதில், உங்களின் பின்புலம், கொள்கைப்பற்று, கழக உணர்வு, குடும்ப வரலாறு, கழக உணர்வு, சமூக வலைதள அறிவு என அனைத்தையும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டதால் உங்களுக்கு இந்தப் பொறுப்பு கிடைத்திருக்கிறது.

### பதவி அல்ல, பொறுப்பு

நீங்கள் தி.மு.க இளைஞர் அணியில் நிர்வாகியாக இருக்கிறேன் என்று பெருமையாகச் சொல்லலாம். வட்ட இளைஞர் அணி பொறுப்புக்கே நிறைய போட்டிகள் இருந்தன. நம் இளைஞர் அணியில் பணியாற்ற வேண்டும் என்ற உறுதியோடு இந்தப் பொறுப்புக்கு வந்துள்ளீர்கள். தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார். `உங்களுக்குக் கொடுத்திருப்பது, பதவி கிடையாது, பொறுப்பு என்பதை நீங்கள் உணந்து பொறுப்போடு செயல்பட வேண்டும்' என்று சொல்வார்.

இந்த நேரத்தில் நான் உங்களுக்கு ஒரு வாக்குறுதி கொடுக்கிறேன். இளைஞர் அணியில் நீங்கள் சரியாக உழைத்து, மக்களின் அன்பைப் பெற்று, மக்களின் ஆதரவைப் பெற்று, மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற உறுதியோடு இருந்தீர்கள் என்றால், நிச்சயம் உங்களுக்கான அங்கீகாரத்தை நம் தலைவர் அவர்கள் வழங்குவார்கள்.

அதற்கு இந்து மேடையே ஒரு மிகச்சிறந்த உதாரணம்.

இங்கே மாவட்டக் கழகச் செயலாளர், மாண்புமிகு அமைச்சர் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள் இளைஞர் அணியில்தான் தன் அரசியல் பயணத்தைத் தொடங்கினார். பகுதி இளைஞர் அணி அமைப்பாளராக இருந்து, கழகத்திற்காகப் பணியாற்றி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராகப் பொறுப்பேற்று, அதன்பிறகு நம் தலைவர் அவர்கள் குழுவில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளராக பணியாற்றிவர்தான் அண்ணன் மா.சுப்பிரமணியன் அவர்கள். அவரின் சிறப்பான இளைஞர் அணி பணிகள்தான் அவரை மேயராக உயர்த்தியது. சென்னை மேயராக மட்டுமல்ல, இன்றைக்கு தமிழ்நாட்டின் அமைச்சராகவும் சிறப்பாக செயல்படுகிறார் என்றால், இளைஞர் அணியில் அவருக்கு நம் தலைவர் அவர்கள் கொடுத்த பயிற்சிதான் காரணம். இளைஞர் அணி என்பது ஒரு பயிற்சிக் களம்.

நம் துணை அமைப்புச் செயலாளர் அண்ணன் தாயகம் கவி அவர்கள் இளைஞர் அணியில் படிப்படியாக உழைத்து, தலைவரின் குழுவில் மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளராகப் பணியாற்றி, இப்போது கழகத்தின் துணை அமைப்புச் செயலாளராக கழகப்பணி ஆற்றி வருகிறார்.

அண்ணன் பாலவாக்கம் விஸ்வநாதன் அவர்கள் மாவட்டத் துணைச் செயலாளராக இன்று இருக்கிறார் என்றால், அவரும் இளைஞர் அணியில் பணியாற்றி உயர்வு பெற்று, இன்றைக்கு இந்தப் பொறுப்புக்கு வந்திருக்கிறார். பகுதிக் கழகச் செயலாளர்கள் அண்ணன் பெருங்குடி ரவிச்சந்திரனாக இருக்கட்டும், அண்ணன் மதியழகனாக இருக்கட்டும் அத்தனை பேரும் இளைஞர் அணியில் பயிற்சி செய்து, அதை நிரூபித்து இன்றைக்கு மிகப்பெரிய பொறுப்புக்கு எல்லாம் வந்திருக்கிறார்கள்.

### சிறப்பான பணி

இந்த மண்டலத்தின் பொறுப்பாளர், மாநில இளைஞர் அணித் துணை செயலாளர் சகோதரர் ஜோயல் அவர்கள் இங்கே வந்திருக்கிறார். அவரும் இளைஞர் அணியில் எனக்கு சீனியர். தலைவர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபொழுது, தலைவரோடு பயணித்தவர், இன்றைக்கு எனக்கும் பக்கபலமாக சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

சென்னையில் இளைஞர் அணி நிகழ்ச்சி எங்கு நடத்த வேண்டும் என்றாலும், அண்ணன் முதலில் சென்னையில் நடத்துகிறேன் எனக்கு ஒரு வாய்ப்பு கொடுங்கள். நான் அதை ஒருங்கிணைக்கிறேன் என்று கேட்டு வாங்கி, அதை ஒவ்வொரு முறையும் சிறப்பாக செய்யக்கூடிய சகோதரர் ஜோயல் அவர்கள்.

உங்கள் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் என் அருமைச் சகோதரர் பிரபாகர் ராஜா இங்கே வந்திருக்கிறார். இளைஞர் அணியின் மாவட்ட துணை அமைப்பாளராக தலைவரிடத்தில் பணியாற்றி, தலைவரின் அன்பையும், மக்களுடைய அன்பையும் பெற்று, அவருடைய பணிகளை எல்லாம் பார்த்து, நம்முடைய தலைவர் அவர்கள் 2021-இல் அவருக்கு வாய்ப்பு கொடுத்தார். விருகம்பாக்கம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்தான் பிரபாகர் ராஜா அவர்கள். இன்று சிறப்பான சட்டமன்ற உறுப்பினராக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார்.

தலைவர் அவர்கள் சொன்னதை நிரூபிக்கின்ற வகையில், இன்னும் அதிகமான இளைஞர்களை நீங்கள் ஒவ்வொருவரும் நம்முடைய இயக்கத்துக்காக நீங்கள் அழைத்து வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு மட்டும்தான் கொள்கை இருக்கிறது. வரலாறு இருக்கிறது. நம்முடைய அரசின், முதலமைச்சரின் சாதனை பட்டியல் இருக்கிறது. அரசு என்னென்ன செய்திருக்கிறது, முக்கியமான சாதனைகளை எல்லாம் தெரிந்துகொள்ளுங்கள். அதை, மக்களிடம் தினமும் கொண்டு போய் நினைவூட்டுங்கள்.

இன்றைக்கு நம்முடைய திராவிட மாடல் அரசைப் பார்த்து, மற்ற மாநிலங்கள் எல்லாம் பாராட்டிக்கொண்டு இரக்கின்றன. ஐந்து நாட்களுக்கு முன்பு முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்த பஞ்சாப்பின் முதலமைச்சர் சென்னைக்கு வந்தார். ``தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களே, இந்தத் திட்டம் மிகச் சிறப்பான திட்டம் விரைவில் பஞ்சாப் மாநிலத்தில், நான் இந்தத் திட்டத்தை அறிமுகப்படுத்த போகிறேன்'' என்று சொன்னார். அதுதான் திராவிட மாடல் அரசின் வெற்றி.

இவற்றையெல்லாம் பொறுக்க முடியாமல்தான் ஒன்றிய பா.ஜ.க அரசும் இங்கு இருக்கக்கூடிய அடிமைக் கூட்டமும் நம்முடைய அரசுக்கு, முதலமைச்சர் அவர்களுக்கு பல நெருக்கடிகளை தந்துக்கொண்டு இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் எதிர்த்து போர்க்குரல் கொடுக்கக்கூடிய ஒரே தலைவர், இந்தியாவிலேயே நம்முடைய தலைவர் என்பதை நீங்கள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல, தலைவர் அவர்கள் 45 நாட்களுக்கு முன்பு ஒரு அறிவிப்பு வெளியிட்டார்கள்.

### இரண்டு கோடி உறுப்பினர்கள்

`ஓரணியில் தமிழ்நாடு' என்ற முன்னெடுப்பைத் துவக்கி வைத்தார்கள். இன்றைக்கு கிட்டத்தட்ட அந்த முன்னெடுப்பு மூலமாக இரண்டு கோடி உறுப்பினர்களை நம் இயக்கத்தில் சேர்த்திருக்கிறோம்.

ஒவ்வொரு மாவட்ட செயலாளரும் என்னிடம் பேசும்பொழுது பெருமையாகச் சொல்லி இருக்கிறார்கள். பாராட்டி இருக்கிறார்கள். இந்த `ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பில் இளைஞர் அணி தம்பிமார்களின் பணி மிகச் சிறப்பாக இருந்தது. வீடு வீடாகச் சென்று மக்களைச் சந்தித்து அவர்களை எல்லாம் கழகத்தில் உறுப்பினர் சேர்த்திருக்கிறார்கள் என்று சொல்லும்போது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும், பெருமையாகவும் இருந்தது. இளைஞர் அணி தம்பிமார்களை நினைத்து, மிகவும் பெருமையாக இருந்தது.

நாம் நாளுக்கு நாள் இப்படி மக்களின் ஆதரவினால், முதலமைச்சருடைய கழகத் தலைவருடைய பணிகளினால் திராவிட முன்னேற்றக் கழக அணியின் வலிமை ஒவ்வொரு நாளும் கூட்டிக்கொண்டே போகின்றது. அதனால்த்தான் நம்மைப் பார்த்து அ.தி.மு.க.வுக்கும், பா.ஜ.கா.வுக்கும் தொடர்ந்து, பயம் வந்து கொண்டே இருக்கிறது.

அ.தி.மு.க.- பா.ஜ.க. கூட்டணி தமிழ்நாட்டுக்கு ஆட்சி வந்தது என்றால், இதை மட்டும் மக்களிடம் சொல்லிக்கொண்டே இருங்கள். மீண்டும் அந்த அடிமைக் கூட்டணி ஆட்சிக்கு வந்ததென்றால், தமிழ்நாட்டுக்குள் மீண்டும் இந்தித் திணிப்பு வரும், தொகுதி மறுவரையறை வரும், புதிய கல்விக் கொள்கை வரும். இவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டும் என்றால், நாம் அடுத்த தேர்தலில் வென்று காட்ட வேண்டும். மக்கள் அதற்கு தயாராக இருக்கிறார்கள். நம்முடைய பணி, இதை மக்களிடம் கொண்டுபோய் சேர்த்து, அவர்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

அடுத்து இன்னும் ஆறு மாதங்கள்தான் நம் கையில் இருக்கின்றன. எனவே, வரவிருக்கின்ற தேர்தல் என்ற போரில், முன்வரிசையில் முன்கள பணியாளர்களாக, முன்கள வீரர்களாக இளைஞர் அணி தம்பிமார்கள் களத்தில் நிற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர் அவர்கள் நமக்கு ஒரு இலக்கு கொடுத்திருக்கிறார். குறைந்தது 200 தொகுதி வெற்றிப்பெற வேண்டும் என்று. நாம் அத்தனை பேரும் களத்தில் இறங்கி மக்களை சந்தித்து நம்முடைய சாதனைகளைச் சொல்லி வாக்கு எண்ணும் நாள்வரைக்கும் கூடவே இருந்து, அந்த வெற்றியை உறுதிப்படுத்த வேண்டும்.

அப்படிக் களத்தில் இறங்கி வேலை பார்த்தோம் என்றால், 200 இல்லை, 200-க்கும் அதிகமான தொகுதிகளில் நம்முடைய அணி நிச்சயமாக வெற்றி பெறும். அந்த 200-ல் முதல் தொகுதியாக இந்த சோழிங்கநல்லூர் தொகுதி இருக்க வேண்டும். அதை, நீங்கள் உறுதி செய்ய வேண்டும்.

இன்றைக்கு அந்த உறுதிமொழியை நாம் எடுக்க வேண்டும். எடுப்போமா? நிச்சயம் பண்ணுவோமா?

2026 சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய கழகம் ஏழாவது முறை ஆட்சி அமைக்க வேண்டுமென்றால், நம்முடைய தலைவர் அவர்கள் தொடர்ந்து இரண்டாவது முறையாக முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வேண்டுமென்றால், இளைஞர் அணி தம்பிமார்கள் நீங்கள் அந்தப் பிரச்சார, தேர்தல் பணிகளை, நீங்கள் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய வட்ட மற்றும் பாக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர் உட்பட இங்கே வருகை தந்திருக்கக்கூடிய அத்தனை நிர்வாகிகளுக்கும் என்னுடைய பாராட்டுகளையும், வணக்கங்களையும், உங்களுடைய பணிகள் சிறப்படைய வேண்டும் என்ற வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொண்டு, வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு என்று கூறி, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

இவ்வாறு கழக இளைஞர் அணிச் செயலாளர்- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, அரவிந்த் ரமேஷ், பிரபாகர்ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், மாநில இளைஞர் அணியின் துணைச் செயலாளர் ஜோயல், அப்துல் மாலிக், பெருங்குடி ரவிச்சந்திரன், மதியழகன், வெங்கடேசன், பாலவாக்கம் விஸ்வநாதன், பாலவாக்கம் மனோகரன், ஹரிகிருஷ்ணன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எழில் பாண்டியன், தியாகராஜன், விநாயகமூர்த்தி, சங்கர் கணேஷ், ராமாபுரம் ரவி, கிருஷ்ணகுமார், கோட்டூர் பிரகாஷ், பகுதி அமைப்பாளர்கள் ஸ்ரீகாந்த், பாபு, நாகேந்திரன், ஒன்றிய அமைப்பாளர் சதீஷ், சமூக வலைதள பயிற்சியாளர் இளமாறன், அன்பகம் செந்தில், ஜெயபிரகாஷ் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.